**சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான

நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 01 - நியமத்தின் பிரகாரம் நிறுவனத்தின் சொத்துக்கள் நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன் நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும். மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துகளின் கொண்டுசெல்லும் தொகை ரூபா 49,509,055 ஆக பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்களை நிதியத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இலங்கை சுங்கத்தால் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக அவை பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது. ரூபா 603,725 தொகையான செலவினம் மீளாய்வாண்டிற்குரிய அச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வாக கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | இந்நிதியத்துடன் தொடர்புடைய முகாமைத்துவ ஏற்பாடுகளை உள்ளடக்கிய சுங்க கட்டளைச்சட்டத்தின் 153(அ)(1) ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தை நிறுவுவதன் நோக்கங்களில் ஒன்று, சுங்க முகாமைத்துவத்தின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவசியம் என்று கருதுகின்றதால் வசதிகளை வழங்குவதற்கான செலவினங்களைச் செய்வதாகும். அதன் பிரகாரம் இலங்கை சுங்க முகாமைத்துவத்தின் செயற்திறனை மேம்படுத்துவதற்காக இந்த நிதியத்தின் பணத்தை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்தக்கள் பயன்படுத்தப்படுகிறதால் இவ்வாறு கணக்கிற்கு கொண்டு வரப்பட்ட செலவினம் அதனுடன் இணங்குகிறது.<br><br>நியதிச்சட்ட நிதியங்கள், நம்பிக்கைப்பொறுப்பு நிதியங்கள் மற்றும் திணைக்கள நிதிய முகாமைத்துவம் தொடர்பாக அரச நிதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2006.12.22 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தி மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த பந்தியின் (ஆ) உப பந்தியின் பிரகாரம் நிதியத்தின் பெறுவனவுகளிற்காக தனியான | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்படுவதால் இந்த நிதியமானது ஒரு தனியான நிறுவனமாகும். ஆகையால் நிதியத்தின் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் சொத்துக்கள் மாத்திரமே அந்த நிதியத்தின் கீழ் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வங்கிக் கணக்கு பராமரிக்கப்படாவிட்டால், திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்பட்டு மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் ஊடாக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நிதியத்தின் கொடுக்கல்வாங்கல்கள் கணக்குப் பொழிப்புக்கள் மூலம் திணைக்களத்தின் ஏனைய கொடுக்கல் வாங்கல்களுடன் மாதாந்தம் மேற்கொள்ளப்படுமானால் நிதியத்தின் கணக்குகள் திறைசேரி கணக்குகளுடன் மாதாந்த அடிப்படையில் ஒப்பிடப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு 20% பங்களிப்பை செலுத்தாததால், அதாவது மீளாய்வாண்டின் இறுதியளவில் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 127 சுங்கக் குற்றங்கள் தொடர்பான 98 கோவைகளிற்காக பெறப்பட்ட ரூபா 729,265,411 தொகையில் ரூபா 145,853,082.20 தொகை நிதியத்தின் வருமானமாகக் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய முறைமையின் பிரகாரம் புலன்விசாரணை பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலும், வெகுமதிக் கோவைகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் வரை 20% பங்களிப்பு சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதில்லை. குறிப்பாக, இந்த வெகுமதிக் கோவைகளுக்கான பெறுவனவுச்சிட்டைகள் முன்னைய ஆண்டு அல்லது பல ஆண்டுகளுக்கு முன்பிருந்த பெறுவனவுச்சிட்டைகளாகும். மேலும் கொடுப்பனவு சமயத்தில் ஏற்கனவே உள்ள மீதிகள் கணக்கிற்கு எடுக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதால் கொடுப்பனவு கோவை பூர்த்தி செய்யப்பட்டதும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது. மேலும், இந்த சுங்க விசாரணைகளுக்கு ஏதேனும் செலவுகள் ஏற்பட்டிருந்தால், அந்தத் தொகை கழிக்கப்பட்டு மிகுதி மாத்திரமே பகிரப்படுகின்றது. அத்துடன் விசேட | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதால் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

தேவைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு முன்னுரிமைகள் தொடர்பாக உளவாளிகளின் கொடுப்பனவுகள் மற்றும் முற்பணக் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது அந்தத் தொகைக்கு தொடர்புடைய 20% பங்களிப்பு இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாததுடன் அக் கோவைகளிற்கான முழுமையான கொடுப்பனவை மேற்கொள்ளும் சமயத்தில் இந்த நிதியத்திற்கு தொடர்புடைய மீதி மாற்றப்படுவதில்லை. மேற்படி விடயங்களின் காரணமாக, சேகரிக்கப்படும் தண்டப்பணத் தொகையில் 20% முழு பங்களிப்பும் இந்தக் கணக்கிற்கு மாற்றப்படுவதில்லை.

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி நாளில் உள்ளவாறான திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் நிதியத்தின் திரண்ட மீதிக்கும் திணைக்களப் புத்தகங்களிற்கும் இடையே ரூபா 21,998,802 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வேறுபாடுகளுக்கான காரணங்கள் விளக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களப் புத்தகங்களுக்கும் திறைசேரி புத்தகங்களுக்கும் இடையிலான நிதியத்தின் திரண்ட மீதியின் வேறுபாடு பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இது தொடர்பில் காலக்கிரமத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தரவுகளிற்கிடையே ஏதாவது வேறுபாடு காணப்பட்டால் அவ் வேறுபாடுகளை ஒப்பீடு செய்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்காக எழுத்துமூலமான சான்று சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தண்டப்பண நிலுவைகளிலிருந்தான வருமானம் தொடர்பான 127 கோவைகளில் ஒரு கோவை சுங்க வளாகங்களில் தவறவிடப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் பதிலளிக்கவில்லை. | தேவையான கட்டுப்பாட்டு முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும். எனவே தான் சுங்க வளாகங்களில் கோவைகள் தவறவிடப்படமாட்டாது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 445,228,992 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 517,183,257 ஆக காணப்பட்டது.

ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 71,954,265 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. தண்டப்பண வருமானம் ரூபா 171,203,443 ஆல் குறைவடைந்தமை மற்றும் நானாவித செலவினங்கள் ரூபா 23,432,544 ஆல் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள ரூபா 2,059,507,428 தண்டப்பண வருமானத்தில் ரூபா 1,031,961,201 தொகை 2017 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை திரண்டிருந்த பெறுமதியாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. | தண்டப்பண நிலுவை வருமானத்தை சேகரிப்பது தொடர்பாக சிக்கல்கள் காணப்படுகின்றமை கவனிக்கப்பட்டதால் தண்டப்பண வருமான சேகரிப்பு செயன்முறையை மீளாய்வு செய்வதற்கும் தண்டப்பண நிலுவை வருமான சேகரிப்பிற்காக முறையான வழிமுறையொன்றை தயாரிப்பதற்கும் திணைக்களத்தின் ஏழு உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. தண்டப்பண வருமானத்தை சேகரிப்பதிலுள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தண்டப்பண நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுதல். |
| (ஆ) | மேற்குறிப்பிட்ட நிலுவைகளினுள் ஒரு நிகழ்வுக்குரிய ரூபா 10,000,000 தண்டப்பணத்திற்காக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் நிதி அமைச்சரிடம் முறையீடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 600,000 தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மேற்குறிப்பிட்ட நிலுவைகள் தொடர்பான 38 நிகழ்வுகளிற்குரிய ரூபா 498,524,278 தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 92,061,351 தொகை மாத்திரமே அறவீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | மேற்குறிப்பிட்ட நிலுவைகளினுள் ஒரு நிகழ்வுக்குரிய ரூபா 20,000,000 தண்டப்பணமொன்றிற்காக சனாதிபதி செயலகத்திற்கு 2008 ஆம் ஆண்டு தொடக்கம் மேன்முறையீடுகள் செய்யப்பட்டுள்ளமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின இறுதி வரையிலும் ரூபா 500,000 மாத்திரமே அறவீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டிலிருந்து 06 சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட நிலுவைகளிலிருந்தான ரூபா 52,540,000 தொகையில் எதுவும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 18(2) ஆம் பிரிவின் பிரகாரம் 02 வருடங்களுக்குள் தண்டப்பணம் அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அறவீடு செய்வதற்கு மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 05 சந்தர்ப்பங்களில் ரூபா 38,441,954 வருமானம் அரசாங்கத்தினால் இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சுங்க கட்டளைச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(அ)(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களிற்கு முரணாக ரூபா 10,974,502 தொகை செலவிடப்பட்டிருந்தது. | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 153(அ)(i) ஆம் பிரிவின் பிரகாரம் சுங்க முகாமைத்துவத்தின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு புலப்படும் வசதிகளை வழங்குவதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தால் செலவினங்கள் | சுங்க கட்டளைச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மேற்கொள்ளப்படலாம். அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உலக சுங்க தினமானது உலக சுங்க நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட அளவுகோல் மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளை உத்தியோகத்தர்களிற்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் நினைவுகூரப்படுகின்றது.

நிதி அமைச்சரின் அங்கீகாரத்துடன் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட 1993.11.05 ஆம் திகதிய 792 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் அத்தகைய செலவினங்களுக்குத் தேவையான ஏற்பாடுகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிலவும் சிரமங்களைக் கருத்தில் கொண்டும் சேவையின் வினைத்திறனை அதிகரித்து ஊக்குவிக்கும் நோக்கத்துடன் குறைந்த எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாலும் அப் பகுதியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்கப்படுகின்றன. இந்தச் செலவினங்கள் அனைத்தும் நிதியத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப உள்ளன.

நிலையான சொத்துகளின் பெறுமானத்தேய்வு மற்றும் கணக்குகளிற்கு கொண்டு வருதல் ஒரு செலவினமாக இல்லாத போதிலும் அது கணக்குகளின் சீராக்கங்கள் மாத்திரமேயாகும்.

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவத் திறனை முறையற்றவாறு மேம்படுத்துதல் மற்றும் உத்தியோகத்தர்களிற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக துல்லியமான அளவுகோல்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கிடப்பட்ட செலவினங்களைத் திட்டமிடுதல் என்பன காரணமாக வருடாந்தம் சேகரிக்கப்படும் பணத்தின் மூலம் நிதியத்தின் திரண்ட மீதி வருடாந்தம் வளர்ச்சியடைந்து வரும் போக்கு அவதானிக்கப்பட்டது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,334 மில்லியன் தொகையான நிதியத்தின் திரண்ட மீதி 2020 திசெம்பர் 31 அளவில் ரூபா 7,779 மில்லியன் வரை ரூபா 445 மில்லியன் அல்லது 6% ஆல் அதிகரித்திருந்தது. அதாவது மீளாய்வாண்டின் வருமானத்தில் 90% நிதயத்தில் திரட்டப்பட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | விற்பனை மூலம் விதிக்கப்படும் தண்டப்பணங்கள் மற்றும் சுங்க விசாரணையின் தண்டப்பணங்களிலிருந்து ஏதேனும் செலவினங்கள் ஏற்பட்டால், சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்தச் செலவினங்களைக் கழித்த பின்னர் இந்த நிதியிற்கு 20% செலவு வைக்கப்படும். அதன் பிரகாரம், நிதியத்தின் பெறுமதி வருடாந்தம் அதிகரிக்கின்றது. 2020.12.31 இல் உள்ளவாறு கணக்கு மீதி ரூபா 7,729 மில்லியனாக காணப்பட்டது. கணனிகளைப் பயன்படுத்தி நன்கு திட்டமிடப்பட்ட முறையில் குழுக்களாக மேற்கொள்ளப்படும் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் மற்றும் ஏனைய தொழில்நுட்பங்களின் முன்னேற்றங்கள் உலகம் முழுவதும் அபிவிருத்தியடைந்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது. அதற்கிணங்க மோசடியாகப் பணம் சம்பாதிக்கும் போக்கு அதிகரித்து வரும் நிலையில், எமது நாட்டிலும் சுங்க வரி ஏய்ப்பு குறையும் என்று எதிர்பார்ப்பது கடினமாகும். | சுங்கக் கட்டளைச் சட்டம் தற்போது 151 வருடங்கள் பழமையானதுடன் அந்தச் சட்டம் அப்போது காணப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நிலைமைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. இருப்பினும், தற்போதைய இயக்கவியலைக் கருத்தில் கொண்டு தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு இது திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ஏறத்தாழ ரூபா 6,025 மில்லியன் தொகை செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காலப்பகுதியின் போது பூர்த்தி செய்யப்பட்ட சுங்க புலன்விசாரணைகளின் எண்ணிக்கை 2,563 ஆகும். 2019 ஆம் ஆண்டில் இந்த நிதியத்திற்காக ரூபா 729.36 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் | -மேற்படி- | உத்தியோகத்தர்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தற்போதைய நிலைமைக்கு பொருத்தமான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அது ரூபா 495.98 மில்லியன் வரை 32 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. பல்வேறு சுங்கக் குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட தண்டப்பண நிதியிலிருந்து பெறப்பட்ட தொகையில் 20% இற்கு சமமான ஒரு சதவீதம் சுங்க வரி மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கு போதுமான நடவடிக்கைகள் பின்பற்றப்படாததால் உருவானதன் காரணமாக இந்த நிதியம் தொடர்ந்து அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | சுங்கக் குற்றங்களுக்கான தண்டப்பணங்களை விதிக்கும் போது அரசாங்க வரி வருமானம் இழக்கப்படுகின்றமை, அந்தத் தண்டப்பணத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு, அந்த தண்டப்பணத்தை அடிப்படையாகக் கொண்டு உத்தியோகத்தர்களின் வெகுமதி தீர்மானிக்கப்படுகின்றமை காரணமாக உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்படும் வெகுமதித் தொகையும், இந்த நிதியத்திற்கு ஒதுக்கப்படும் தொகையும் அதிகரித்திருந்த போதிலும், அரசாங்க வரி வருமானம் பட்டியலிட்டவாறு சேகரிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | அந்த குற்றத்தை கண்டுபிடிப்பதிலுள்ள உத்தியோகத்தர்களின் நுணுக்கம் காரணமாக சுங்கக் குற்றங்களுக்கு தண்டப்பணம் விதிப்பதன் மூலம் தண்டனை வழங்கப்படுகின்றது. அத்தகைய ஒரு குற்றம் கண்டுபிடிக்கப்படாவிட்டால், அந்தச் சம்பவத்தில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த வருமான தொகையும் சில சமயங்களில் அரசாங்கத்தால் இழக்க நேரிடும். எவ்வாறாயினும், சுங்க உத்தியோகத்தர்களின் திறமையின் அடிப்படையில் அந்த சுங்கக் குற்றத்தைப் பிடிக்க முடிந்ததன் மூலமான பெறுவனவுகளில் ஏறத்தாழ 30 சதவீதத்தை அரசாங்கம் பெறுகின்றது; எனவே, சுங்கக் குற்றங்களைப் பிடிப்பதற்காக உத்தியோகத்தர்களை ஊக்குவித்தலை உயர் மட்டத்தில் பேணக்கூடிய அதே நேரம் அரசாங்க வருமானத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யலாம். | சுங்கக் குற்றங்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிவது சுங்க உத்தியோகத்தர்களின் கடமையாக உள்ளதென்பது தெரிகின்றது. புலன்விசாரணை ஒன்றின் பின்னர் சுங்க உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட தண்டப்பணத்திலிருந்தான பெறுகைகளில் 70% மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனையின் மூலம் பெறப்பட்ட தொகையானது முதல் சந்தர்ப்பத்திலேயே சுங்கக் குற்றங்கள் கண்டறியப்படாததால், திரண்ட நிதிக்கு சேகரிக்கப்படாமல் காணப்படுதல் என்பன தொடர்பாக மீளாய்வொன்று நடாத்தப்பட வேண்டும். |
| (ஈ) | தற்போதைய சுதந்திர பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவும் ஏற்றுமதியின் சிக்கலான தன்மைக்கு ஏற்ப சுங்க கட்டளைச் சட்டம் மற்றும் தொடர்புடைய நிதியங்களின் சட்ட ஏற்பாடுகளை | சுங்க கட்டளைச் சட்டம் மற்றும் நிதியத்தின் சட்ட ஏற்பாடுகள் அவ்வப்போது பொருத்தமானவாறு திருத்தப்படுகின்றதுடன் அதற்கிணங்க காலக்கிரமத்தில் அவற்றைத் | சுங்க கட்டளைச் சட்டம் தற்போது ஏறத்தாழ 151 வருடங்கள் பழமையானதுடன் இந்தச் சட்டம் அன்றைய காலப்பகுதியில் |

| | | | |
|---|---|---|---|
| | முறையாகவும் சரியான நேரத்திலும் திருத்தத் தவறியதால் இந்த அபிவிருத்திகள் முதன்மையாக பாதிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | திருத்துவது குறித்து கவனம் செலுத்தப்படும். | காணப்பட்ட இறக்குமதி-ஏற்றுமதி நிலைமைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போதைய இறக்குமதி-ஏற்றுமதி நிலைமையைக் கருத்தில் கொண்டு தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமானவாறு இது திருத்தப்பட வேண்டும். |
| (உ) | நிதியத்தின் கடந்த கால செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் நிதியத்தில் திரட்டப்பட்ட மீதிகளை திரண்ட நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான பொறிமுறையை உருவாக்குவதற்கு பொறுப்பான தரப்பினரின் கவனத்தை ஈர்த்தல் என்பவற்றிற்கான தேவையொன்று அவதானிக்கப்படுகின்றது. | முகாமைத்துவம் பதிலளித்திருக்கவில்லை. | மேலதிக பணம் தொடர்பாக திறைசேரியிடம் விசாரித்து பொருத்தமான முறைமயொன்றை உருவாக்குதல். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது நிதியத்தின் வருமானம் ரூபா 496 மில்லியனாக காணப்பட்டது. மொத்த செலவினம் ரூபா 51 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும் நிதியத்தின் முதன்மை நோக்கங்களுக்கான மொத்தச் செலவினம் ஏறத்தாழ ரூபா 40 மில்லியனாகும். இது வருமானத்தின் சதவீதமொன்றாக 08 சதவீதமாக காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது.<br><br>இந்த நிதியத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி செலவினங்களை ஈடுசெய்வதாகும், மேலும் நாட்டில் கொரோனா தொற்றுநோய் நிலைமையைத் தொடர்ந்து நாடு அவ்வப்போது மூடப்படுவதால் திட்டமிட்டபடி பயிற்சி நடவடிக்கைகளுக்கு உத்தியோகத்தர்கள் அனுப்பப்படாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | இந்தச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டு சுங்க உத்தியோகத்தர்களிற்கு இழப்பீட்டை வழங்குவதற்கும் ஊழியர்களின் நலனை மேம்படுத்துவதற்கும் தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமானவாறு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | சுங்க உத்தியோகத்தர்களுக்கு அவர்களது கடமைகளை நிறைவேற்றும் போது ஏற்படும் அனர்த்தங்களுக்கான நட்டஈடு இந்த நிதியத்தின் ஆரம்ப நோக்கங்களில் ஒன்றாக இனங்காணப்பட்டிருந்த | மேற்படி 7 ஆண்டுகளின் போது அத்தகைய அனர்த்தங்களிற்கு இழப்பீட்டு உரிமைக் கோரிக்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், சுங்கக் குற்றங்களை பிடிப்பதற்கு கடினமாக | -மேற்படி- |

| | |
|---|---|
| போதிலும் கடந்த 07 வருட காலப்பகுதியின் போது அவ்வாறான நட்டஈட்டு கொடுப்பனவு எதுவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை . அதற்கிணங்க அந்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இந்த நிதிக்கு மேலும் அசாதாரணமான முறையில் நிதி சேகரிக்கப்பட்டு வந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | உழைக்கும் நேர்மையான உத்தியோகத்தர்களிற்கு உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால், அந்த உத்தியோகத்தர்கள் அவர்களது கடமைகளுக்கு அர்ப்பணிப்பதற்காக இத்தகைய நிதியத்தில் இவ்வளவு பெரிய பணத்தொகையை வைத்திருப்பது அவர்களின் குடும்பங்களுக்கு காப்புறுதி நிதி போன்ற நல்ல பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றது. இது உத்தியோகத்தர்களின் உயிருக்கு ஆபத்தாக இருந்த போதிலும் அவர்களது கடமைகளில் அவர்கள் தம்மை அர்ப்பணிப்பதற்கு ஊக்குவிக்கின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செலவினங்கள் தொடர்பான உண்மையான தொகைகளையும் பாதிடப்பட்ட தொகைகளையும் ஒப்பிடும் போது 06 செலவின விடயங்களிற்கு 100 சதவீதம் வரையில் தொகைரீதியான வேறுபாடு அவதானிக்கப்பட்டதன் காரணமாக பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை, | அந்த நேரத்தில் இருந்த தேவைகள் மற்றும் ஏனைய தகவல்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய செலவினங்களை 100 சதவீதம் சரியாக கணிக்க முடியாது. முக்கியமாக 2020 ஆம் ஆண்டின் போது அவ்வப்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டமை மற்றும் கொவிட் தொற்றுநோய் காரணமாக ஏனைய கட்டுப்பாடுகள் காரணமாக பயிற்சிக்காக உத்தியோகத்தர்களை வழிநடத்த இயலாதிருந்தமை அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட வேறுபாடுகளுக்கு வழிவகுத்தது. | பாதீட்டை தயாரிக்கும் போது தேவைகள் சரியாக இனங்காணப்பட்டு தேவையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |